தோழி
பிப்ரவரி 1-15, 2016

# கல்யாணச் செலவு

## 5 ஆயிரம் ரூபாய்!

**நாடு முழுவதும் பல துறைகளில் சாதித்த 100 பெண்களுக்கு, மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் விருது வழங்கியுள்ளது. ஜனவரி 22 அன்று ராஷ்டிரபதி பவனில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தலைமையில் நடந்த விருந்தில் கலந்து கொண்டு விருதையும் பெற்று வந்திருக்கிற நம்மூர் பெண்கள் சிலருடன்...**


ஷியாமா ரமணி

“விருது பத்தி எனக்கு எதுவும் தெரியாது. சங்கீதானு ஒரு தோழிதான் இதைப் பத்தி சொன்னாங்க. அவங்கதான் என்னை நாமினேட் பண்ணினாங்க. ‘வாக்கெடுப்பு நடத்தி தேர்ந்தெடுக்கிறது சரியா? உண்மையா உழைக்கிறவங்க எத்தனையோ பேர் இருக்காங்களே’னு விருதுக் குழுவுக்கே போன் பண்ணிக் கேட்டேன்.

“அப்படியெல்லாம் இல்லை. நாமினேட் ஆனவங்க தகுதியானவங்கதானானு கண்காணிக்க ஒரு டீம் இருக்கு. தவறான வாக்குகள் விழறதைக் கண்டுபிடிக்கவும் ஆட்கள் இருக்காங்க... இப்படியொரு கேள்வியை இதுவரைக்கும் யாருமே எங்கக்கிட்ட கேட்கலைன்னாங்க...” - பெரிய சிரிப்புடன் பளிச் தமிழில் பேசுகிறார் பிரான்ஸ் வாழ் தமிழச்சியான ஷியாமா ரமணி!

“திருச்சியில பிறந்து, டெல்லியில வளர்ந்தவள் நான். ஸ்காலர்ஷிப்ல வெளிநாட்டுக்கு படிக்கப் போனேன். அங்கே நான் சந்திச்ச பிரெஞ்சு மாணவர் ஜான் ஃபிரான்ஸ்வா க்ளாவரை கல்யாணம் பண்ணிக்கிட்டேன். காந்தியன் கொள்கைகள்ல ரொம்ப ஈடுபாடு கொண்ட குடும்பம் எங்களுடையது. கல்யாணச் செலவுகள்ல எனக்கு என்னிக்குமே உடன்பாடு இருந்ததில்லை. என்னோட கல்யாணச் செலவு வெறும் 5 ஆயிரம் ரூபாய்தான்!

கல்யாணத்துக்குப் பிறகு நான் பிரான்ஸ் போயிட்டேன். நம்மூர்ல ஐ.ஏ.எஸ். மாதிரி அங்கே பிரெஞ்சு ரிசர்ச் சர்வீஸ்னு ஒரு பதவி இருக்கு. அதுல எனக்கு இடம் கிடைச்சது. ஆனா, அங்கே நான் சந்திச்ச அவமானங்கள் கொஞ்சமில்லை. 90கள்ல நான் அங்கே இருந்தபோது என்னை coloured womanனு கூப்பிடுவாங்க. கழிவறைச் சுத்தம் செய்யற பெண்ணுனு நினைப்பாங்க. பிரான்ஸ்ல உள்ள ஒரு முன்னணி காலேஜ்ல எம்.பி.ஏவுக்கு பாடம் எடுக்கப் போன போது, என்கிட்ட பக்கெட்டையும் துடைப்பத்தையும் கொடுத்து பாத்ரூம் கழுவச் சொன்னாங்க. நம்ம நிறமும் தோற்றமும் அவங்களை எப்படி யோசிக்க வைக்குது? வாழ்க்கைன்னா என்னங்கிறதை அங்கே கத்துக்கிட்டேன். அந்த அனுபவம் எனக்கு நிறைய சொல்லிக் கொடுத்தது.

2004ல சுனாமி வந்தபோது என்னோட மொத்தக் குடும்பமும் சென்னையில பீச்ல இருந்தாங்க. ஆனாலும், எல்லாரும் காப்பாற்றப்பட்டாங்க. நாம பத்திரமா, பாதுகாப்பா இருக்கோம். எல்லாம் இழந்தவங்களோட நிலைமை என்னனு முதல் முறையா யோசிச்சேன். ரொம்பவும் பாதிக்கப்பட்ட, தனித்தீவா நின்ன காமேஸ்வரம் கிராமத்தைத் தேடிக் கண்டுபிடிச்சேன். நாகப்பட்டினம் பக்கத்துல உள்ள அந்த கிராமத்தை எத்தனை பேருக்குத் தெரியும்னே தெரியலை. நிறைய மீனவர்கள், தலித் மக்கள், நரிக்குறவர் இனத்தவர்கள் வாழற அந்தப் பகுதியில என் வேலைகளைச் செய்யறதுல ரொம்ப சந்தோஷமா உணர்ந்தேன். அந்தப் பகுதி மக்களுக்கு அடிப்படைப் பொருளாதாரப் பாதுகாப்பு, சுகாதார வசதிகள், ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழல், குழந்தைகளுக்கான பாதுகாப்பு, ஆண்-பெண் சமத்துவம்னு எல்லா விஷயங்களும் சரியான கிடைக்கணும்கிற நோக்கத்தோட அந்த கிராமத்தை தத்தெடுத்தேன். முதல் சில வருஷங்களுக்கு இந்தியாவுல உள்ள மத்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி திரட்டிக் கொடுத்தேன். 2006ல திருச்சியில ‘உதவும் நண்பன்’னு ஒரு என்.ஜி.ஓ. ஆரம்பிச்சேன். கிராமப்புற மக்களுக்கு கழிவறைகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்தேன். குப்பையில்லாத சமூகத்தைக் கொண்டுவரப் பாடுபட்டேன். ஒரு கட்டத்துல பல வேலைகள் சரியா நடக்காதது புரிஞ்சது. கழிவறைகள் கட்டிக் கொடுக்கறதோட தன் வேலை முடிஞ்சிட்டதா சில தொண்டு நிறுவனங்கள் நினைக்கிறாங்க. ஆனா, அந்தக் கழிவறைகள் பயன்படுத்தப்படணும்... சுத்தமா பராமரிக்கப்படணும்... பழுது பார்க்கப்படணும்... டாய்லெட் எப்படிக் கட்டறதுங்கிறதுலேருந்து, அதை பராமரிக்கிறது வரைக்கும் எல்லாத்தையும் நானே மக்களுக்கு சொல்லித் தரேன்.




> **இந்த உலகத்துலயே எந்த கிராமம் சுத்தம், சுகாதாரம், அடிப்படை வசதிகளோட இருக்கோ, அதுக்கு நிகரா தமிழக கிராமங்களை மாத்துவேன்னு அவருக்கு வாக்கு கொடுத்தேன்.**

2013ல ‘உதவும் நண்பர்’ அமைப்பை சமூக நிறுவனமா கொண்டு போகிற எண்ணத்துல FIN-SWAM (Sanitation Waste And Management)னு மாத்தினோம். காமேஸ்வரம் கிராம மக்கள் மற்றும் சில தன்னார்வலர்களோட ஒத்துழைப்போட சில விஷயங்களைப் பண்ணிட்டிருக்கோம். காமேஸ்வரம் மற்றும் அதைச் சுத்தின கிராம மக்களுக்கு சுகாதாரம், கழிவு மேலாண்மை பத்தின விழிப்புணர்வை சொல்லிக் கொடுத்திட்டிருக்கேன். சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான கழிவறைகள் அமைக்கப் பயிற்சிகள் தரோம். செப்டிக் டேங்க் உடன் உள்ளதைவிடவும் நவீனமாகவும் கவர்ச்சியாகவும் கழிவறைகள் அமைக்கிறதுக்கான முயற்சிகளை யோசிக்கிறோம். கிராமங்களுக்குள்ளேயே மறுசுழற்சி முறையில கழிவு மேலாண்மையை எப்படித் திறம்பட செய்ய முடியும்னு விழிப்புணர்வை ஏற்படுத்தறோம்.

நான் சமூக சேவையில இறங்கின போது எங்கப்பா பக்கவாதம் வந்து படுத்த படுக்கையா இருந்தார்.

‘நீ எடுத்துக்கப் போற வேலையை எக்காரணம் கொண்டும் பாதியில நிறுத்த மாட்டேன்னு உத்தரவாதம் கொடு’னு எழுதிக் கொடுக்கச் சொன்னார். அப்புறம்தான் என்னை ஆசிர்வாதமே பண்ணினார். இந்த உலகத்துலயே எந்த கிராமம் சுத்தம், சுகாதாரம், அடிப்படை வசதிகளோட இருக்கோ, அதுக்கு நிகரா தமிழக கிராமங்களை மாத்துவேன்னு அவருக்கு வாக்கு கொடுத்தேன். அது இன்னும் முழுமையாகலை. இன்னும் சில வருஷங்கள்ல நிச்சயம் நடக்கும்ங்கிற நம்பிக்கை இருக்கு...” - சத்தமாகச் சொல்கிறார் ஷியாமா. •